அ.வ எண் 130/2021 கருப்பசாமி (வாசா2) தேதி:23.01.2024

1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை எதுவும் கிடைக்கப்பெறவில்லை என்றால் சரிதான். எனது சொந்த ஊர் மற்றும் குடியிருக்கும் ஊர் சூரங்குடி என்று சொன்னால் சரிதான். தாவா சொத்திற்கு வடக்கே எனக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளதாக சொல்லப்பட்டது குறித்து மேற்படி சொத்தின் சர்வே எண்கள், நான்கு மால்கள் நான் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி வடக்கு பக்கம் எனக்கு இருப்பதாக சொல்லக்கூடிய சொத்தின் ஆவணங்கள் எவையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு எதற்காக நடக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு தாவா சொத்திற்கு வடக்கு பக்கம் சொத்து இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றும் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மந்திகுளம் கிராமத்தில் எனக்கு எந்த சொத்தும் கிடையாது என்றும், அதனால் தான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனது சாட்சியத்தில் உண்மை தன்மை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

திறந்தவெளி நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)R. ரத்தினவேல் பாண்டியன்
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.